# SECONDARY SCHOOL

## END - OF - YEAR EXAMINATION - 2017

## TAMIL LANGUAGE PAPER

## SECONDARY 3 EXPRESS / 3NA

Set by: Cluster
Vetted by: Mr Valavan
Approved by: Mdm Oen Siew Yock

Parent's signature : ________________

This Question Paper consists of 8 printed pages.

Instruction to candidates:

குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
2. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைத்தாளின் முகப்பு அட்டையில் பெயர், வகுப்பு ஆகியவற்றைச் சரியாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

*Questions:*

"அ" பிரிவு

A1. மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

1 ________________ தூய்மையாக இருக்க யோகாப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று பலர் நம்புகின்றனர்.



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

Q2 ____________ இல்லாமல் உயிர்களைத் துன்புறுத்துவோர் தண்டிக்கப்பட வேண்டும்.

Q3 தீய பழக்க வழக்கங்களுக்கு ____________ வாழ்க்கை இனிமை இல்லாமல் அமைவதோடு மனச்சோர்வையும் ஏற்படுத்திவிடும்.

Q4 ஒருவரிடம் உள்ள திறமை முழுமையாக வெளிப்பட ____________ சிந்தித்துச் செயல்படும் குணம் அவசியம்.

Q5 ____________ அனைவரும் புத்தாண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

| | |
|---|---|
| 1 ஆற அமர | 6 ஈவுஇரக்கம் |
| 2 அக்கம் பக்கம் | 7 அல்லும் பகலும் |
| 3 எடுத்த எடுப்பிலேயே | 8 அன்றும் இன்றும் |
| 4 தட்டிக்கொடுத்தால் | 9 இமுக்கடிக்காமல் |
| 5 இடங்கொடுத்தால் | 10 அகமும் புறமும் |

**A2. வாக்கியங்களை முடித்தெழுதுதல்** (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப் பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகளை விடைத்தாளில் எழுதவும்.**

Q6. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிக் கருத்துகளை வலியுறுத்தியுள்ள சிறப்பு திருக்குறளுக்கு உண்டு.

வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிக் கருத்துகள் ____________

Q7. அக்காலத்தில் சோழ மன்னர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளைக் கைப்பற்றி ஆண்டார்கள்.

அக்காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் ____________



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

Q8. ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறச் சிறந்த தலைவர்கள் தேவை.

சிறந்த தலைவர்களே ஒரு நாடு ________.

Q9. சித்தர்களால் குணப்படுத்த இயலாத நோய் ஏதுவும் இல்லை என்பது பழங்கால மக்களின் உறுதியான நம்பிக்கை.

சித்தர்களால் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியும் ________________

Q10. கட்டுப்பாடுகளுடன் வாழும் மனிதர்களே வாழ்க்கையில் சாதனைகளைப் புரிந்துவருகின்றனர்.

சாதனைகள் புரியவேண்டுமானால் ________________

A3 <u>அமைப்புச்சொற்கள்</u>

(10 மதிப்பெண்கள்)

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச்சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

இசை, ஓவியம் ஆகிய கலைகள் செவிக்கும் கண்ணுக்கும் விருந்தளிப்பதுடன் மனத்தையும் கவர்கின்றன. அவை எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தும். குறையிருந்தால், யாரையும் காயப்படுத்தாது. மனத்தைக் குளிர வைத்து உறவையும் நட்பையும் (Q11)________ பேச்சுக்கலையில் நாம் சொல்லும் சொல் கொஞ்சம் பிசகினாலும் மற்றவரைக் காயப்படுத்திவிடும். நாவினால் பேசிய சொற்கள், ஆறவே (Q12)________ என்றார் திருவள்ளுவர். சிலருக்கு, அடுத்தவரை ஏளனப்படுத்திப் பார்ப்பதில் தனிச்சுகம் இருப்பதாக நினைத்து, வார்த்தைகளுக்கு நடுவே குத்தலும் கேலியும் விதைத்து (Q13)________. பட்டாம் பூச்சியின் சிறகைக் கிள்ளி எறிந்து துடிக்கவிடும் சிறுவனைப் போல் சிலர் தனக்கு வேண்டாதவரை நான்கு பேர் நடுவே பரிகசித்துப் பார்ப்பதில் எல்லையில்லாத மகிழ்ச்சி அடைவர். அப்படிப்பட்டவர்கள், உண்மையான மகிழ்ச்சியின் அர்த்தத்தை (Q14)________ இருக்க முடியும்.



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

எனவே, ஒரு கலையைக் கற்க ஆர்வமும் பயிற்சியும் தேவைப்படுவதை (Q15)________ கனிவாய் உரையாட, ஆர்வமும் பயிற்சியும் தேவைப்படுகின்றன. கனிவான உரையாடல் மனித நேயத்தை வளர்க்கும் என்பதால் அதைப் போற்றி வளர்ப்பது நம் கடமையாகும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | போன்றது | (6) | இணைக்கும் |
| (2) | ஆறாது | (7) | போல |
| (3) | மகிழ்வர் | (8) | பிணைக்கும் |
| (4) | ஆறும் | (9) | உரையாடுவர் |
| (5) | அறியாதவர்களாகத்தான். | (10) | உணராதவர்களாகத்தான் |

## "ஆ" பிரிவு

### B4. தெரிவுவிடைக் கருத்தறிதல்

**(10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

**வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

பகுதி 1

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து தோன்றுபவை பழமொழிகள். நம் முன்னோர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் மூலம் உணர்ந்த உண்மைகளை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்துகொள்ள விட்டுச் சென்ற அறிவுத்துளிகள் பழமொழிகளாகும். இவை நம் சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணையாக உள்ளன. தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியம் என்று கூறலாம்.

பொதுவாகப் பழமொழிகள் உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மக்களிடையே வழக்கத்தில் உள்ளனவாக இருக்க வேண்டும். அதே சமயத்தில், அளவில்



More papers at www.testpapersfree.com

சிறியவையாகவும் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடியவையாகவும் இருக்க வேண்டும். பழமொழிகளில் காணப்படும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக இருப்பது அவசியம்.

பழமொழிகளை உலகில் வாழும் அனைத்து மக்களும் பயன்படுத்துகின்றனர். மனித சமுதாயத்தின் நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், பண்பாடு, வாழ்க்கைமுறை போன்றவற்றைப் பழமொழியின் வாயிலாக நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. அறக்கருத்துகளை வலியுறுத்தவும் தவறு செய்யும்போது இடித்துரைக்கவும் பெரியோர்களும் சான்றோர்களும் பழமொழிகளை அதிகம் கையாளுகின்றனர். மக்கள் தங்கள் வாழ்வில் பெற்ற அனுபவம் என்பதாலும் பழமொழிகளில் கூறப்படும் கருத்துகள் உண்மையானவை என்பதாலும் மக்களிடையே பழமொழிகளுக்குச் செல்வாக்குண்டு.

<u>வினாக்கள்</u>

Q16 தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியம் என்று ஏன் கூறப்படுகிறது?

(1) அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து தோன்றுபவை என்பதால்
(2) எதிர்காலச் சந்ததியினரும் அறிந்துகொள்ள முடியும் என்பதால்
(3) சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிவதால்
(4) நம் முன்னோர்கள் உணர்ந்த உண்மைகளை எடுத்துக் கூறுவதால்

Q17 பழமொழிகள் இன்றும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் என்ன?

(1) பழமொழிகள் மக்களிடையே வழக்கத்தில் உள்ளனவாக இருப்பதே
(2) பழமொழிகளில் காணப்படும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக இருப்பதே
(3) பழமொழிகள் உண்மையின் அடிப்படையில் அமைந்திருப்பதே
(4) பழமொழிகள் எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளக்கூடியவையாக இருப்பதே

Q18 சான்றோர்கள் எப்போது பழமொழிகளை அதிகம் பயன்படுத்துகின்றனர்?

(1) பழக்க வழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை வலியுறுத்தும்போது
(2) மக்கள் செய்யும் தவறை வலியுறுத்தும்போது
(3) கருத்துகள் உண்மையானவை என்பதை வலியுறுத்தும்போது
(4) மக்களிடம் கருத்துகளை வலியுறுத்தும்போது



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

பகுதி 2

இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள். சமுதாயத்தில் இளையர்களுக்கு அதிகப் பொறுப்புணர்வு இருப்பது அவசியம். ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க ஆற்றல் மிகுந்த இளையர்கள் தேவை. ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் இளையர்களின் பங்குதான் அதிகம். தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் இளையர்கள் நாட்டின் பழம்பெரும் தனிச்சிறப்புகளை அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டிற்குச் சரியான முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும். வறுமையை ஒழித்துச் செழிப்பை ஏற்படுத்துவது இளையர்களின் முதன்மையான கடமையாக இருக்க வேண்டும்.

வறுமையின் காரணமாகத்தான் சண்டை, சச்சரவு, ஏற்றத் தாழ்வு, வன்முறை போன்றவை ஒரு நாட்டில் நிகழ்கின்றன. வறுமையை ஒழிக்க வேண்டுமானால் பொருள் வளம் பெருக வேண்டும்; பொருளாதாரம் செழிக்க வேண்டும்.

இராணுவத்தில் இளையர்கள் தாமாகவே முன்வந்து சேர வேண்டும். நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்க்கப் பாடுபட வேண்டும். சமுதாயத்தில் நிலவும் மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க இளையர்கள் பாடுபட வேண்டும். ஒவ்வோர் இளையரும் பாடுபட்டு உழைத்தால்தான் ஒரு நாடு வளர்ந்த நாடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. **இதனை உணர்ந்து இளையர்கள் செயல்பட வேண்டும்.**

Q19 எது இளையர்களின் தலையாயக் கடமை ஆகும்?

(1) நாட்டின் பழம்பெரும் தனிச்சிறப்புகளை அறிந்திருப்பது
(2) ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவது
(3) தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பது
(4) தாய்நாட்டின் வளத்தைப் பெருக்குவது

Q20 **'இதனை உணர்ந்து இளையர்கள் செயல்பட வேண்டும்.'** இந்த வாக்கியத்தில் இதனை என்பது எதனைக் குறிக்கிறது?

(1) இராணுவத்தில் இளையர்கள் தாமாகவே முன்வந்து சேர வேண்டும் என்பதை
(2) நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்க்கப் பாடுபட வேண்டும் என்பதை
(3) ஒரு நாட்டிற்குச் சரியான முன்னேற்றத்தைக் கொண்டு வர உழைப்பு அவசியம் என்பதை
(4) சமுதாயத்தில் நிலவும் மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க இளையர்கள் பாடுபட வேண்டும் என்பதை



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

"இ" பிரிவு

C5 சுயவிடைக் கருத்தறிதல்

(30 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதவும்.

சில குற்றங்களுக்குத் தனி மனிதர் காரணம் அல்ல; சுற்றுப்புற வாழ்வின் புது அமைப்பு, சமுதாய நிலை காரணமாக இருக்கக் காண்கிறோம். அப்போது அத்தகைய சமுதாயத்தின் கொடுமையை அம்பலப்படுத்த, காட்டிக்கொடுக்க நம் மனம் விழைகிறது. ஆனால், நமக்கோ உரிமை இல்லை. அந்தக் குறையைத் தீர்த்து வைக்கிறது நல்ல நாவல் இலக்கியம்.

வாழ்க்கையில் நாம் பொல்லாத மனிதர்களை வெறுத்தால் என்ன இடையூறு வருமோ என்று அஞ்சுகிறோம். நாவலில் உள்ள கற்பனை உலகத்தில் சில மனிதர்களை வெறுப்பதால் ஒருவகை இடையூறும் நமக்கு ஏற்படுவதில்லை. எந்தக் காரணத்தாலும் அஞ்சாமல் தயங்காமல் வெறுப்புணர்ச்சியைப் புலப்படுத்த முடிகிறது... வாழ்க்கையில் நமக்கு உரிமை குறைவு. கற்பனையில் முழு உரிமை உள்ளது. வாழ்க்கையில் சட்டம், நீதிமன்றம், பணத்தின் செல்வாக்கு போன்ற அரண்களைக் கடந்து தீயவர்களைப் பற்றி நம்மால் அறிய முடியவில்லை. பொல்லாதவர்களை நம்முன் நிற்கச் செய்து பழித்து நசுக்கும் ஆற்றல் நாவல்களின் கற்பனையில் உள்ளது. இந்த வகையில் நாவல்களின் பாத்திரப் படைப்பு நமக்குப் பெரிதும் உதவி புரிகிறது.

அறிவு வளர வளர, அனுபவம் முதிர முதிர, நம் கருத்தும் உணர்ச்சியும் ஒத்தவர்கள் இந்தச் சமுதாயத்தில் மிகவும் குறைவு என்பதை உணர்கிறோம். ஒரு சிலர் இருந்தபோதிலும் அவர்களோடு நெருங்கிப் பழக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. இதனால், உள்ளம் வாடுகிறது. நமது உள்ளத்துப் பயிர்கள் தழைத்து வளர்வதற்கு அவர்களைப் போன்ற கற்பனை மனிதர்களாவது தேவைப்படுகிறார்கள். கதைகளில் வரும் கற்பனை மனிதர்கள் நெருங்கிப் பழகுவதற்குக் கிடைக்கிறார்கள்.

இன்றைய சமுதாய நிகழ்ச்சிகளையும் சிக்கல்களையும் அடியோடு புறக்கணித்துவிட்டு ஒதுக்கி கற்பனையாகவே எல்லாவற்றையும் படைத்துக்கொண்டு, அந்தக் கற்பனையில் தன்னை மறந்து வாழத் தூண்டும் கதைகள் சில உண்டு. அவற்றை வாசகர்கள் நாடுவது தப்பியோடும் தன்மை ஆகும்.



(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

சமுதாயச் சிக்கல்களை உள்ளவாறு எடுத்துக்காட்டி, அவற்றோடு போராடி வெல்லவல்ல வீர மனிதர்களைப் படைத்துக் காட்டுவதை அந்தச் சமுதாயக் கொடுமைகளுக்குப் பலியாகி மடியும் தியாக மனிதர்களைப் படைத்து நம் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்குவதைத் **தப்பியோடும் தன்மை என்று குறை கூறுவது பொருந்தாது**. செயலளவில் சமுதாயத்தைச் சீர்திருத்தும் **வாய்ப்பும்** ஆற்றலும் ஏற்படும் வகையில் சிந்தனையளவில் எழுச்சியும் கிளர்ச்சியும் உண்டாக்கி வரும் கற்பனைகளில் முழ்குவது தவறு இல்லை. (நாவல் ஆசிரியர் படைப்புக் கலையில் வல்லவர். வாழ்வில் ஏற்படும் சமுதாயம் குறை மிக்கதாக இருக்கும்போது, கற்பனையில் தக்க சமுதாயத்தைப் படைத்துக் காட்டும் உரிமை அவனுக்கு உண்டு. அந்தப் படைப்பைப் பயன்படுத்தி உள்ளத்திற்கு ஊக்கமுட்டும் உரிமை படிப்பவர்களுக்கு உண்டு.)

(நன்றி: காலந்தோறும் தமிழ்)

<u>வினாக்கள்</u>

Q21. சமுதாயத்தில் நிகழும் குற்றங்களுக்கு எவை காரணங்கள் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்? (3 மதிப்பெண்கள்)

Q22 நிஜ வாழ்க்கை கற்பனை வாழ்க்கையோடு எவ்வாறு ஒப்பிடப்படுகின்றது? (7 மதிப்பெண்கள்)

Q23. ஏன் சிலர் கதைகளில் வரும் கற்பனை மனிதர்களை நாடுகிறார்கள்? (7 மதிப்பெண்கள்)

Q24 '**தப்பியோடும் தன்மை என்று குறை கூறுவது பொருந்தாது**' என்று கட்டுரையாசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்? (4 மதிப்பெண்கள்)

Q25 நாவல் ஆசிரியர் உரிமைக்கும் நாவல் படிப்பவர் உரிமைக்கும் உள்ள வேறுபாடு யாது? (4 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதவும்.**

Q26 விழைகிறது ______________________ (1 மதிப்பெண்கள்)

Q27 இடையூறு ______________________ (1 மதிப்பெண்கள்)

Q28 புலப்படுத்த ______________________ (1 மதிப்பெண்கள்)

Q29 புறக்கணித்துவிட்டு ______________________ (1 மதிப்பெண்கள்)

Q30 வாய்ப்பும் ______________________ (1 மதிப்பெண்கள்)

(முற்றும்)



More papers at www.testpapersfree.com

# TESTPAPER 5

Set 5- விடைகள்

தூய்மையாக இருக்க யோகா ..........

Q1. 10 Q2. 6 Q3. 5 Q4. 1 Q5. 8

Q6. . . திருக்குறளில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

Q7. . . சோழ மன்னர்களால் கைப்பற்றி ஆளப்பட்டது.

Q8. . . பொருளாதார வளர்ச்சி பெறத் தேவைப்படுகிறார்கள் / செய்கிறார்கள்.

Q9. . . என்பது பழங்கால மக்களின் உறுதியான நம்பிக்கை ஆகும் / நம்பிக்கையாக இருந்தது.

Q10. . . மனிதர்கள் வாழ்க்கையில் கட்டுப்பாடுகளுடன் வாழ வேண்டும்.

Q11. 8 Q12. 2 Q13. 3 Q14. 5 Q15. 7

Q16. 3 Q17. 2 Q18. 4 Q19. 4 Q20. 3

Q21. சமுதாயத்தில் நிகழும் குற்றங்களுக்குச் சுற்றுப்புற வாழ்வின் புது அமைப்பு மற்றும் சமுதாய நிலை ஆகியவை காரணங்கள் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

Q22. நிஜ வாழ்க்கையில் நாம் பொல்லாத மனிதர்களை வெறுத்தால் என்ன இடையூறு வருமோ என்று அஞ்சுகிறோம். நிஜ வாழ்க்கையில் நமக்கு உரிமை குறைவு என்பதோடு சட்டம், நீதிமன்றம், பாணத்தின் செல்வாக்கு போன்ற அரண்களைக் கடந்து தீயவர்களைப் பற்றி நம்மால் அறிய முடியவில்லை. ஆனால், இதற்கு நேர்மாறாக, கற்பனை வாழ்க்கையில் சில மனிதர்களை வெறுப்பதால் ஒருவகை இடையூறும் நமக்கு ஏற்படுவதில்லை என்பதோடு எந்தக் காரணத்தாலும் அஞ்சாமல் தயங்காமல் வெறுப்புணர்ச்சியைப் புலப்படுத்த முடிகிறது. அதோடு, கற்பனை வாழ்க்கை, பொல்லாதவர்களை நம்முன் நிற்கச் செய்து பழித்து நசுக்கும் ஆற்றலை நமக்குத் தருகிறது. இவ்வாறு நிஜ வாழ்க்கை கற்பனை வாழ்க்கையோடு ஒப்பிடப்படுகிறது.

Q23. அறிவு வளர வளர, அனுபவம் முதிர முதிர நம் கருத்தும் உணர்ச்சியும் ஒத்தவர்கள் இந்தச் சமுதாயத்தில் மிகவும் குறைவு என்பதை நாம் உணர்வதோடு அப்படியே ஒரு சிலர் இருந்தபோதும் அவர்களோடு நெருங்கிப் பழக வாய்ப்பு இல்லாமலும் போய்விடுகிறது. இதனால் உள்ளம் வாடுகிறது. நமது உள்ளத்துப் பயிர்கள் தழைத்து வளர்வதற்கும் ‘நெருங்கிப் பழகுவதற்கும்’ கற்பனை மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். இதுவே சிலர் கதைகளில் வரும் கற்பனை மனிதர்களை நாடுவதற்கான காரணம் ஆகும்.

Q24. சமுதாயச் சிக்கல்களோடு போராடி வெல்லவல்ல வீர மனிதர்களைச் சமுதாயக் கொடுமைகளுக்குப் பலியாக்குவதையும் அதனால் நம் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்குவதையும் ‘தப்பியோடும் தன்மை என்று குறை கூறுவது பொருந்தாது.’ என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

Q25. வாழ்வில் ஏற்படும் சமுதாயம் குறை மிக்கதாக இருக்கும் போது கற்பனையில் தக்க சமுதாயத்தைப் படைத்துக் காட்டுவது நாவல் ஆசிரியர் உரிமை ஆகும். அந்தப் படைப்பைப் பயன்படுத்தி உள்ளத்திற்கு ஊக்கமூட்டுவது நாவல் படிப்பவரின் உரிமை ஆகும். இதுவே இருவரின் உரிமைக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

Q26. ஆசைப்படுகிறது, விரும்புகிறது Q27. தடங்கல், தடை

Q28. வெளிப்படுத்த Q29. உதாசீனப்படுத்திவிட்டு

Q30. சந்தர்ப்பமும்

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com